# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் (26.02.2021) 26 – ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>26.02.2021</td><td>
பொருள் – 1<br>
மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 2021-22 முதல் 2023-24 மூன்றாண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 26.02.2021 அன்று நடைபெற்றது.<br>
மேற்படி குத்தகை இனத்திற்கான பொது ஏல த்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் உயர்ந்தபட்ச தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.<br>
<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்</u>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.G.மதுசூதனன், 177, காட்டுப்பட்டி, கண்ணுடையான்பட்டி, மணப்பாறை</td><td>ரூ,2,57,000/-</td></tr>
<tr><td>2</td><td>திரு.S.K.சேக்முகமது, த/பெ.காதர்ஒலிராவுத்தர், 115/9, பூமாலைப்பட்டி பிரிவு, மதுரை ரோடு, மணப்பாறை.</td><td>ரூ,2,63,456/-</td></tr>
</table>
ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற் கான வர ப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு .S.K.சேக்முகமது, த/பெ.காதர்ஒலிராவுத்தர், 115/9, பூமாலைப்பட்டி பிரிவு , மதுரை ரோடு, மணப்பாறை என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,63,456/- (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்தாறு மட்டும் ) குறிப்பிட்டுள்ளார். மேற்படி உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள திரு .S.K.சேக்முகமது, த/பெ.காதர்ஒலிராவுத்தர், 115/9, பூமாலைப்பட்டி பிரிவு , மதுரை ரோடு , மணப்பாறை அவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .19.09.2008-ன்படி, ஒப்படைக்கவும்,
</td><td>தீர்மான எண்.941<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 01.04.2021 முதல் 31.03.2022 வரை முதல் வருட குத்தகை தொகையாக ரூ.2,63,456/-ம், 01.04.2022 முதல் 31.03.2023 வரை இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையானது முதல் ஆண்டு குத்தகை தொகையுடன் சேர்த்து 5 சதவிகிதம் உயர்வு செய்தும் , 01.04.2023 முதல் 31.03.2024 வரை மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையுடன் 5 சதவிகிதம் உயர்வு செய்தும் கேட்பு நிர்ணயம் செய்து உரிமத்தை திரு.S.K.சேக்முகமது என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச தொகை மூன்றாண்டு சராசரி தொகையைவிட கூடுதலாகவும் , கடந்த வருட குத்தகை தொகையைவிட கூடுதலாகவும் இருப்பதால் ஒப்புதல் வழங்கலாம். | |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**